**OS.46/2023**

**நாள். 31.07.2025.**

**வா.சா.1 – ரமேஷ்**

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

நான் என்ன கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம்கேட்டு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் ஆதீயில் பொன்னையா சேர்வை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பொன்னையா சேர்வைக்கு வேலுச்சாமி, காமாட்சி அம்மாள் ஆகிய இருவரும் வாரிசுகள் என்றால் சரிதான். பொன்னையா சேர்வை 1938ம் ஆண்டிலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் பொன்னையா சேர்வையின் மகன் வேலுச்சாமி மட்டும் வாரிசு அடிப்படையில் சொத்துக்களை பாத்தியம் அடைந்து பட்டா மாற்றி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். வேலுச்சாமி என்பவருக்கு நாகசௌந்தரம்மாள் என்ற மனைவி இருந்தார் என்றால் சரிதான். நாகசௌந்தரம்மாள் மூலம் வேலுச்சாமிக்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். பிறகு வேலுச்சாமியும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வேலுச்சாமி இறந்த பிறகு அவரது சொத்துக்கள் அவரது மனைவியான நாகசௌந்தரம்மாளுக்கு வாரிசு முறையில் பாத்தியமாகிவிட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை 08.12.1941ம் தேதி நாகசௌந்தரம்மாள் குப்புச்சாமி சேர்வை என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். கிரையம் பெற்ற குப்புச்சாமி சேர்வை 23.11.1943ம் தேதியில் தனது மனைவியான காமாட்சி அம்மாளுக்கு தாவா சொத்துக்களை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். கிரைய பாத்தியம் பெற்ற காமாட்சி அம்மாள் தன் பெயரில் பட்டா மாற்றி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். குப்புசாமி சேர்வையும், காமாட்சி அம்மாளும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துவிட்டார்கள் என்றால் சரிதான். குப்புச்சாமி சேர்வை வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டு தனியாக சென்றுவிட்டார் என்றால் சரிதான். காமாட்சி அம்மாளும், குப்புசாமி சேர்வையும் நிரந்தமாக பிரிந்துவிட்டார்கள் என்றால் சரிதான். குப்புச்சாமி சேர்வைக்கும், காமாட்சி அம்மாளுக்கும், பூமயில், வேலுச்சாமி என இரு பிள்ளைகள் என்றால் சரிதான். குப்புசாமி சேர்வை காமாட்சி அம்மாளை பிரிந்த காலகட்டத்தில் காமாட்சி அம்மாள் மனநலம் பாதிப்படைந்து இருந்தார் என்றால்

சரிதான். 08.05.1996 ம் தேதி காமாட்சி அம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். காமாட்சி அம்மாள் இறந்த பிறகு அவரது மக்களாக பூமயிலும், வேலுச்சாமியும் தாவா சொத்துக்களை வாரிசு அடிப்படையில் பாத்தியம் அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். பூமயில் 10.10.2009 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். பூமயிலின் வாரிசுகள் தான் இவ்வழக்கில் 2 முதல் 11 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் பூமயிலின் வாரிசுகளுக்கு பாதி பங்கும், வேலுச்சாமியின் வாரிசுகளுக்கு பாதி பங்கும் உள்ளது என்றால் சரிதான். வேலுச்சாமியின் மனைவிதான் இவ்வழக்கில் 1 ம் வாதி என்றால் சரிதான். வேலுச்சாமியின் மகன்தான் நான் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் 2 ம் வாதி என்றால் சரிதான். வேலுச்சாமியின் மகள் லதா இவ்வழக்கில் 1 ம் பிரதிவாதி என்றால் சரிதான். வேலுச்சாமி உயிருடன் இருந்த காலத்தில் 12 ம் பிரதிவாதியான கலாவுடன் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி கலாவுக்கும், வேலுச்சாமிக்கும் பிறந்த குழந்தைகள்தான் 13, 14 பிரதிவாதிகளான சுகன்யா, முகேஷ்கண்ணன் என்றால் சரிதான். 12 ம் பிரதிவாதி கலா வேலுச்சாமியின் சட்டப்படியான வாரிசு இல்லை என்றால் சரிதான். 13, 14 பிரதிவாதிகளான சுகன்யா, முகேஷ்கண்ணன் வேலுச்சாமிக்கு பிறந்த முறையற்ற குழந்தைகள் என்றால் சரிதான். வேலுச்சாமிக்கு பாத்தியப்பட்ட பாதி பங்கு சொத்தில் வாதிகளுக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் சமபங்கு உள்ளது என்றால் சரிதான். பூமயிலுக்கு பாத்தியப்பட்ட பாதி பங்கு சொத்தில் 2 முதல் 11 பிரதிவாதிகளுக்கு சமபங்கு உள்ளது என்றால் சரிதான். வேலுச்சாமிக்கு பாத்தியப்பட்ட பாதி பங்குசொத்தில் வாதிகள், 1 ம் பிரதிவாதி மற்றும் 13, 14 பிரதிவாதிகளுக்கு தலா 1/5 பாகம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை வாதிகளான நாங்களும், பிரதிவாதிகளும் பாகம் பிரித்துக்கொள்ளாமல் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து காமாட்சி அம்மாளோ, அவரது மகள் பூமயிலோ எந்த உயிலும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். 12, 13, 14 பிரதிவாதிகள் பூமயில் உயில் எழுதி வைத்ததாக பொய்யாக உரிமை கொண்டாடுகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 12 ம் பிரதிவாதிக்கு எந்த பாகஉரிமையும் கிடையாது என்றால் சரிதான்.

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என அவரது வழக்கறிஞர் தெரிவித்ததின்பேரில் குறுக்கு விசாரணை இல்லை.**

**12 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எனக்கு பூர்வீகம் எந்த ஊர் என்றால் வழுதூர். என் தாயார் (1ம் வாதி) ஊரில் உள்ளார் என்றால் சரிதான். வழுதூரில் உள்ள இரயில்வே கேட் அருகில் உள்ள கதவு எண். 1487 என்ற வீட்டு விலாசத்தில் நான், என் தாயார் காமாட்சி அம்மாள், 1ம் பிரதிவாதி லதா ஆகிய அனைவரும் சேர்ந்து குடியிருந்து வருகிறோம் என்றால் லதா எங்களிடம் சேர்ந்து குடியிருக்கவில்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 1ம் பிரதிவாதியின் விலாசம் கதவு எண். 1487 என்ற வீட்டு விலாசத்தை காண்பித்து அழைப்பாணை அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். நான், என் அம்மா மற்றும் என் அக்கா லதா ஆகிய மூவரும் ஒரே வீட்டில்தான் வசித்து வருகிறோம் என்றும் தற்போது என் அக்கா லதா எங்களுடன் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. என் அக்கா லதா மதுரையில் வசித்து வருகிறார். அவ்வப்போது வழுதூரில் உள்ள அவரது மகன் வீட்டிற்கு வந்து செல்வார். அவரது மகன் வீடு எங்கள் வீட்டிற்கு சற்று தள்ளி உள்ளது. அவரது மகன் வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீடு என் அம்மாவின் அப்பா பாலுச்சாமி சேர்வை கட்டிய வீடு என்றால் சரிதான். அந்த வீட்டில் நானும், என் அம்மாவும் கடந்த 50 வருடங்களாக குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் வழுதூரில் குடியிருக்கும் வீடு தாவா சொத்தாக இவ்வழக்கில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் யார் தகவல் சொன்னது என்றால் நானும், என் அம்மாவும். என் அக்கா லதா தாவா சொத்துக்களில் பங்கு கேட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளாரா என்றால் செய்துள்ளதாக என் வழக்கறிஞர் சொன்னார். பொன்னையா சேர்வை எந்த வருடம் இறந்தார் என்றால் தெரியாது, ஆனால் 1938ம் ஆண்டுக்கு முன்பே இறந்துவிட்டதாக பெரியவர்கள் சொன்னார்கள். பொன்னையா சேர்வையின் இறப்பு சான்றிதழ் வாங்கியுள்ளோமா என்றால் இல்லை. என் தந்தை வேலுச்சாமியை காமாட்சி அம்மாளின் மகன் என்று வம்சாவளிப்பட்டியலில் காண்பித்துள்ளோம் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் என் தந்தை வேலுச்சாமி

உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 14.02.2024 ம் தேதி இறந்தார். வேலுச்சாமியின் வாரிசு என்ற அடிப்படையில்தான் நானும், என் அம்மாவும் தாவா சொத்துக்களில் உரிமைகோருகிறோம் என்றால் சரிதான். என் தந்தை வேலுச்சாமி ஏன் வாதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் என் தந்தை உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் தாக்கல் செய்யவில்லை. என் தந்தை உயிருடன் இருந்த காலத்தில் எனக்கும், என் அம்மாவுக்கும் தாவா சொத்துக்களில் எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றும், உரிமையே இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா 11 வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள வழுதூர் நடுத்தெருவில் கதவு எண்.5/20 ல்தான் காமாட்சி அம்மாளும், குப்புச்சாமியும் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த வீட்டில்தான் 12 முதல் 14 பிரதிவாதிகள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா வழக்கில் 12 முதல் 14 பிரதிவாதிகளின் விலாசத்தை வழுதூர் நடுத்தெருவில் கதவு எண்.5/20 த்தான் காட்டியுள்ளோம் என்றால் சரிதான். என் தாயாருக்கும், என் தந்தை வேலுச்சாமிக்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என கூற முடியுமா என்றால் ஞாபகமில்லை. என் தாயாரால் கூறமுடியும் என்றால் முடியும், அவர் தற்போது உடல்நலமின்றி இருந்து வருகிறார். என் தாயாரும், என் தந்தையும் திருமணத்திற்கு பிறகு வழுதூர் நடுத்தெருவில் கதவு எண்.5/20 ல்தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் தெரியாது. அந்த வீட்டில்தான் நானும், என் அக்கா லதாவும் பிறந்து வளர்ந்தோம் என்றால் தெரியாது. என் அக்கா பிறந்த வருடம் தெரியுமா என்றால் தெரியாது. நான் பிறந்த வருடம் தெரியுமா என்றால் 1973. என் தந்தை வேலுச்சாமியும், என் தாயார் காமாட்சி அம்மாளும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து விட்டார்கள் என்றால் என் தந்தைக்கும் 12 ம் பிரதிவாதி கலாவுக்கும் தொடர்பு ஏற்பட்டதால் என் தாயார் பிரிந்துவிட்டார். வழுதூர் நடுத்தெருவில் கதவு எண்.5/20 ல்தான் என் தந்தையும், தாயும் குடியிருந்து வந்தார்கள் என்றும் பின்னிட்டு கருத்து வேறுபாடு ஏற்பட்டு என் தந்தையும், தாயும் விவாகரத்து செய்து கொண்டார்கள் என்றால் இல்லை. விவாகரத்துக்கு பிறகுதான் என் தாயார் வழுதூர் இரயில்வே கேட்டுக்கு அருகில் உள்ள கதவு எண்.1487 வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தந்தைக்கும், தாயுக்கும் விவாகரத்து ஏற்பட்டு 50 வருடங்கள் ஆகிவிட்டது என்றும், கடந்த 50

வருடங்களாக என் தாய் கதவு எண்.1487 வீட்டில்தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் கதவு எண். 5/20ல்தான் வசித்து வந்தார் என்றும், பிறகு அந்த வீட்டில்தான் இறந்தார் என்றும் சொன்னால் சரிதான். என் தந்தை என் தாயாரை விவாகரத்து செய்த பிறகு 12ம் பிரதிவாதி கலாவை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. அந்த விலாசத்தில்தான் 12 முதல் 14 பிரதிவாதிகள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த விலாசத்தை காண்பித்துத்தான் 12 முதல் 14 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். என் தந்தையின் 2ம் மனைவி என 12ம் பிரதிவாதியை வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான், 12ம் பிரதிவாதியை என் அப்பா சேர்த்துக்கொண்டதால் அவ்வாறு சொல்லியுள்ளோம். என் அப்பா என் அம்மாவை விவாகரத்து செய்த பிறகு 12ம் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டதால் வழக்குரையில் 12ம் பிரதிவாதியை என் அப்பாவின் 2வது மனைவி என்று காண்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. குப்புச்சாமி சேர்வைக்கும் அவரது காமாட்சி அம்மாளுக்கும் எப்போது கருத்து வேறுபாடு என தெரியுமா என்றால் தெரியாது. பெரியவர்கள் சொல்லித்தான் எனக்கு தெரியும். குப்புச்சாமி சேர்வையும், காமாட்சி அம்மாளும் எந்த வருடம் பிரிந்தார்கள் என்றால் தெரியாது. குப்புசாமி சேர்வைக்கும், காமாட்சி அம்மாளுக்கும் விவாகரத்து ஏற்படவில்லை என்றால் தெரியாது, ஆனால் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்று கேள்விப்பட்டேன். குப்புசாமி சேர்வை வேறு ஒரு பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார் என நான் சொல்லும் பெண்ணின் பெயர் தெரியுமா என்றால் பர்வதவர்தினி என்று சொன்னார்கள். அவர் எந்த ஊர் என்றால் தெரியாது. குப்புச்சாமியும் பர்வதவர்தினியும் எங்கு சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் தெரியாது. குப்புச்சாமி சேர்வைக்கும் காமாட்சி அம்மாளுக்கும் எந்த காலத்திலும் கருத்து வேறுபாடு ஏற்படவில்லை என்றும், அவர்கள் இருவரும் கடைசி வரை ஒன்றாக சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. குப்புசாமி சேர்வை பர்வதவர்தினி என்ற பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காமாட்சி அம்மாளுக்கு எப்போது மனநலம் பாதிக்கப்பட்டது என்றால் சரியாக தெரியாது. ஆனால் 1960ம் வருடத்திற்கு பின்பு என்று சொன்னார்கள். காமாட்சி அம்மாள் மனநலம் பாதிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் நேரடியாக தெரியாது,

பெரியவர்கள் சொல்லித்தான் தெரியும். காமாட்சி அம்மாளுக்கு மனநலம் பாதிக்கப்பட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காமாட்சி அம்மாள் மற்றும் அவரது கணவர் குப்புச்சாமி அவகளது மக்கள் வேலுச்சாமி, பூமயில், வேலுச்சாமியின் மனைவி கலா ஆகியோருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. குப்புச்சாமி சேர்வை மற்றும் காமாட்சி அம்மாளை என் அப்பா வேலுச்சாமி, என் அத்தை பூமயில் மற்றும் என் சித்தி கலா ஆகிய மூவரும்தான் கவனித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. என் பாட்டி காமாட்சி அம்மாள் சில சொத்துக்களை அடமானம் வைத்தும் கிரையமும் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. என் பாட்டி காமாட்சி அம்மாள் நல்ல மனநிலையில் இருந்தபோது தான் அடமானமும், கிரையமும் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு என் பாட்டி காமாட்சி அம்மாள் பெயரில்தான் பட்டா இருந்தது என்றால் சரிதான். என் தந்தை வேலுச்சாமி பெயரில் தாவா சொத்துக்களுக்கு பட்டா மாறவில்லை என்றால் சரிதான். காமாட்சி அம்மாள் நல்ல மனநிலையிலும், உடல்நிலையிலும் இருக்கும்போதுதான் 16.05.1995 ம் தேதி ஒரு உயில் எழுதி வைத்தார் என்றால் தெரியாது, அந்த உயில் விவரம் 2023 ம் வருடம்தான் தெரியும். உயில் ஆள்மாறாட்டம் வைத்து எழுதப்பட்டுள்ளது என சொல்லியுள்ளோம், யாரை வைத்து ஆள்மாறாட்டம் செய்து உயில் எழுதப்பட்டது என்றால் தெரியாது. உயில் படி தாவா சொத்துக்களை காமாட்சி அம்மாள் பூமயில் மற்றும் கலாவிற்கு பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. காமாட்சி அம்மாள் இறந்த பிறகு பூமயில், கலா ஆகிய இருவரும் தான்சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 20.12.2007 ம் தேதி பூமயில் ஒரு உயில் வைத்துள்ளார் என்றால் அப்போது தெரியாது, 2023 ம் வருடம்தான் தெரியும். பூமயிலை ஏமாற்றி உயில் வாங்கிக்கொண்டார்கள் என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் பூமயிலுக்கு 7 குழந்தைகள் உள்ளது. அவர்களை விட்டுவிட்டு எழுதிக்கொடுத்ததால் ஏமாற்றி வாங்கியிருக்கலாம் என்று சொல்கிறேன். பூமயிலின் 7 மக்களும் திருமணமாகி தனித்தனியாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, ஆண் மக்கள் அனைவரும் வழுதூரில் ஒரு வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். அந்த வீட்டின் கதவு எண் தெரியாது. நான் பூமயிலின் 7 மக்களும் ஒன்றாக குடியிருந்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், அவர்கள் திருமணமாகி தனித்தனியாக

வசித்து வருகிறார்கள் என்றும், கலாவும், பூமயிலும்தான் ஒன்றாக வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பூமயில் உயில் எழுதி வைத்த பிறகு 7 வது அயிட்ட சொத்தை கடந்த 01.06.2009 தேதியில் பூமயிலே குமார் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் கேள்விப்பட்டேன். தாவாசொத்துக்களுக்கு பூமயில் மற்றும் கலா பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் தெரியாது. அவர்கள் பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டதை ஆட்சேபித்து நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் 2023 ம் வருடம்தான் பட்டா மாறுதல் ஏற்பட்ட விவரம் தெரியும். அதன் பிறகாவது நான் பட்டா மாறுதல் சம்மந்தமாக நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல்செய்துள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண்.201/6 ல் கண்ட 12 வது இலக்க சொத்தினை என் பாட்டி காமாட்சி அம்மாள் இறந்த பின்னர் என் தந்தை வேலுச்சாமி 14.11.1994 தேதியிட்ட அடமான பத்திரத்தின் மூலம் ஏ.முகம்மது காதீன் என்பவருக்கு அடமானம் வைத்து கடன் பெற்றிருந்தார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் பாட்டி காமாட்சி அம்மாள் 1996 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 12 ம் இலக்க சொத்தை பொறுத்து என் பாட்டி காமாட்சி அம்மாள் உயிருடன் இருந்த காலத்திலேயே என் தந்தை வேலுச்சாமி 14.11.1994 தேதியில் அடமான பத்திரம் எழுதிக்கொடுத்ததாக நான் உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த அடமான கடன் பத்திரத்தின் அசல் தற்போது யாரிடம் உள்ளது என்றால் தெரியாது. என் தந்தை வா.சா.ஆ.10 அடமான கடன் பத்திரத்தில் என் பாட்டி காமாட்சி அம்மாள் வாய்மொழிஇனாம் கொடுத்ததாக பொய்யாக கூறி அடமானக்கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

**(12 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.